23.01.2026

O.S.No. 643/2011

PW1– திருமலைராஜ்– த/பெ. மூக்கன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.01.2026

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் கீழக்கலங்கலில் வசித்துவருகிறேன். நான் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். இறந்துபோன 1ம் வாதி எனது சகோதரர் ஆவார். அவரும் கீழக்கலங்கலில் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். ஒரேவீட்டில் தான் வசித்துவந்தோம், தற்போதுதான் இரண்டாகபிரிந்துவிட்டது. பிராது தபசில் சொத்து எனது வீட்டிற்கு அடுத்துள்ளது என்றால் சரியல்ல, சுமார் 100 மீ தொலைவில் உள்ளது.

2. பிராது தபசில்சொத்திற்கு வடப்பக்கம் கீழக்கலங்கல் – குறிஞ்சாங்குளம் சாலை உள்ளது என்றால் சரிதான். பிராதுதபசில் சொத்திற்கு தென்பக்கம் ராக்கன் குடும்ப சொத்து உள்ளது. மேற்படி தெற்குபக்கமுள்ள சொத்து ராக்கன் குடும்பத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

3. எனது பிராதில் பிராதுதபசில் சொத்திற்கான எல்கைமால் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தாயின் பெயர் வேலம்மாள்.1ம் வாதியின் தாய் பெயர் மாரியம்மாள். மாரியம்மாளும், வேலம்மாளும் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி இருவரின் இறப்புமற்றும் வாரிசு சான்று என் வசம் உள்ளது என்றால் சரிதான்.

4. எனது தாயின் தந்தை பெயர் பெருமாள். பெருமாளுக்கு வேறு பெயர்கள் கிடையாது என்றால் சரிதான். பெருமாளின் தந்தை பெயரும் பெருமாள்தான். பெருமாளின் தந்தைக்கு பெருமாளை தவிரவேறு பெயர்கள் கிடையாது என்றால் சரிதான். எனது தாயின் தகப்பனார் எனக்கு 1 வயது இருக்கும்போதே இறந்துவிட்டார்.

5. எனது தாயுடன் உடன்பிறந்தவர்கள் மொத்தம் 5 பேர். மாரியம்மாள், வெள்ளையம்மாள், சந்தனம்மாள், கிருஷ்ணம்மாள் மற்றும் எனது தாய். வெள்ளையம்மாள், சந்தனம்மாள், கிருஷ்ணம்மாள் ஆகியோர் ஆரம்பத்தில் எங்கள் ஊரில்தான் வசித்துவந்தார்கள், பிற்போது இலங்கை சென்றுவிட்டார்கள். அவ்வப்போது எங்கள் ஊருக்கு வந்து செல்வார்கள். மேற்படி மூவருக்கும் திருமணமாகி பிள்ளைகள் இருந்தது என்றால் சரிதான். தற்போது இலங்கையில் செட்டில்ஆகிவிட்டனர்.

6. பிராது தபசில் சொத்து பெருமாளின் 5 வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டது என நான் சொல்கிறேன் என்றால் சரிதான், அவர்கள் பிற்பாடு எங்களுக்கு எழுதிக்கொடுத்தார்கள் என சொல்கிறேன். அதற்கான ஆவணம் என் வசம் தான் உள்ளதா என்றால் உள்ளது.

7. பிராது தபசில்சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது கட்சிப்படி எனதுதாயின் தந்தை பெருமாளுக்கு பாத்தியப்பட்டது. எனது பிராதில் பிராது தபசில்சொத்து பெருமாளுக்கு வா.சா.ஆ.1 ஆவணம் மூலமும், 25.09.1933 கிரைய ஆவணமும் மூலம் பாத்தியப்பட்டது என நான் கூறியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. நான் கூறிய தகவலின் அடிப்படையில்தான் பிராது தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. எனது பிராதில் நான் என்ன கூறியுள்ளேன் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிராது தபசில் சொத்து எனது தாயின் தந்தைபெருமாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் கிரையம் மூலம் பாத்தியப்பட்டது.

9. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் பிராது தபசில் சொத்து பெருமாளுக்கு கிரையம் கிடைத்தது என்றால் இது தவறாக உள்ளது. ஆனால் இது நான் தாக்கல் செய்த ஆவணம் தான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து பிராது தபசில் சொத்து கிடையாது, இதை தவறாக தாக்கல் செய்துவிட்டோம். பிராதுதபசில்சொத்தின் சர்வே எண் தெரியும், அதற்கான சர்வே எண்.430/3. **என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான சர்வே எண்.430/3 க்கான கார்லேசன் ஸ்டேட்மெண்ட் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

10. எனக்கு பிராது தபசில் சொத்துக்கான பழைய சர்வே எண் தெரியாது. நான் முதல்விசாரணை வாக்குமூலத்துடன் தாக்கல் செய்த ஆவணங்களின் விவரம் தெரியும், அதை நான் படித்துப்பார்த்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்த மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணத்தின் முதலாவது கட்டம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் பிராதுதபசில் சொத்துக்கான பழைய சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.6 ஆவணத்தின் உள்ள தீர்வை ரசீதுகளை நான் செலுத்தி வாங்கவில்லை என்றால் சரிதான், மேற்படி தீர்வை ரசீதுகள் எந்த பட்டா எண் தொடர்பான சொத்துக்களானது என்றால் 503. மேற்படி தீர்வை ரசீதுகளை எனது அண்ணன் கிருஷ்ணன் தான் செலுத்தினார், எனவே மேற்படி தீர்வைகளில் இறந்துபோன இந்த வழக்கின் 1ம் வாதியின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக தீர்வையில் பட்டாதாரர் பெயர் தான் குறிப்பிடுவார் என்றால் சரிதான். செலுத்துபவர் பெயரை குறிப்பிட்டு தீர்வையின் கடைசியில் எழுதுவார்கள் என்றால் சரிதான்.

12. பிராதுதபசில் சொத்துக்கு 1ம் வாதி கிருஷ்ணன் பெயரில் பட்டா கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 எந்த காலக்கட்டத்திற்காக செலுத்தப்பட்டது என்றால் யூ.டி.ஆர்க்கு முன்பு கட்டப்பட்டது. தாவா சொத்து தவிர 1ம் வாதிக்கு வேறு சொத்துக்கள் கிடையாது என்றால் சரிதான். எனதுதாயார் பெயருக்கோ, 1ம் வாதியின் தாயார் பெயருக்கோ பிராதுதபசில்சொத்தில் பட்டா கிடையாது என்றால் சரிதான். எனது பெயருக்கும் பட்டா கிடையாது என்றால் சரிதான்.

13. பிராது தபசில் சொத்துக்கு எனது தாய் தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான், 1ம் வாதி தான் செலுத்திவந்தார். வா.சா.ஆ.6 ஆவணத்தில் முத்திரை இல்லை என்றால் சரியல்ல, மேற்படி வா.சா.ஆ.6 ஆவணம் வழக்கிற்காக போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆதியில் தாவா சொத்து புஞ்சை நிலமாக இருந்தது என்றால் சரிதான்.

14. தாவா சொத்தில் மேல்பக்கம் 5ம் பிரதிவாதியும், கீழ்பக்கம் 4ம் பிரதிவாதியும் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் ஆக்கிரமிப்பு செய்துகுடியிருந்து வருகிறார்கள். மேற்படி 2 வீடுகளுக்கும் தென்பக்கம் 2ம் பிரதிவாதி கருப்பசாமி காலிமனையாக அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் மோசடியான பத்திரம் மூலம் அனுபவம் செய்துவருகிறார்கள். மேற்படி வீடுகளுக்கு மின்கட்டணம், பஞ்சாயத்தில் வரி செலுத்தி பிரதிவாதிகள் குடியிருந்துவருகிறர்கள் என்றால் மேற்படி மின்இணைப்பிற்கும், வீட்டுவரிக்கும் நாங்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளோம்.

15. பிரதிவாதிகள் பிராது தபசில் சொத்து எனது தாயின் தந்தையான பெருமாள் பகடைக்கு பாத்தியப்பட்டதில்லை என்று கூறுகிறார்கள் என்றால் அது தவறானது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் எந்தவித அரசு முத்திரையோ, கையெழுத்தோ இல்லை என்றால் அதிலுள்ள Covering letter ல் முத்திரை உள்ளது.

16. பிராது தபசில் சொத்து ஆதியில் மாடசாமி நாடாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. மாடசாமி நாடாரின் மனைவி தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். ஆனால் பிராதுதபசில்சொத்து அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து கிடையாது. மாடசாமி வாரிசுகளிடம் இருந்து 3ம் பிரதிவாதி 19.07.2011 அன்று வடபாதி 13 சென்டைகிரையம் வாங்கியுள்ளார்கள் என்றால் அதை எதிர்த்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அதைபோல் தென்பாதி 13 சென்டை 4ம் பிரதி வாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அதையும் எதிர்த்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.

17. 4ம் பிரதிவாதியிடம் இருந்து 20.12.2017 அன்று 6ம் பிரதிவாதி நன்கொடை மூலமாக 1பகுதியை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி அதே தேதியில் நன்கொடை மூலம் மற்றொரு பகுதியை 5ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிராது தாக்கல் செய்யும் ஆவணத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை பிற வாதிகள் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான், ஆனால் தற்போது எனது முதல்விசாரணையுடன் தாக்கல் செய்துள்ளேன்.

18. என்னிடம் காட்டப்படும் 25.09.1933 ஆவணம் பிராதுதபசில்சொத்து தொடர்பில்லாத ஆவணம் என்பதால் தாக்கல் செய்யவில்லை. எனக்கு பிராது தபசில் சொத்தில் எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வீடுகள் கட்டும்போது நான் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, ஆட்சேபனை தெரிவித்துதான் வழக்கு தாக்கல் செய்தோம், ஊர்க்கூட்டம் போட்டும் பேசினோம். வழக்குதாக்கல் செய்யும் சமயத்தில் தான் பேசினோம். நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி